**சுருக்கம்**

மதுரை மாநகராட்சி– மதுரை மாநகராட்சியில் செயல்படுத்தப்பட்டு வரும் ரூ.1192 கோடி அளவிலான திட்டப்பணிகளை மேற்பார்வையிட ஒரு தலைமைப் பொறியாளர் பணியிடம் தோற்றுவித்து ஆணைகள் வெளியிடல்.

---

**நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மாந–4) துறை**

**அரசாணை (3டி) எண். 1** **நாள் 12 –01–2009**

**திருவள்ளுவர் ஆண்டு 2039,**
**மார்கழித் திங்கள், 29 –ஆம் நாள்**

**படிக்கப்பட்டன:**

1. அரசாணை (2டி) எண்.105, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நநி2) துறை, நாள் 26–06–2007
2. ஆணையாளர், மதுரை மாநகராட்சி கடிதம் எண்.மநி1/18107/2006/எம்சி2, நாள் 24–07–07
3. நகராட்சி நிர்வாக ஆணையர் கடித ந.க.எண். 45215/2007/எப்4 நாள் 18.02.2008.

-----

**ஆணை:**

நகராட்சி நிர்வாக ஆணையர் பார்வை 3ல் படிக்கப்பட்ட கடிதத்தில் மதுரை மற்றும் கோயம்புத்தூர் மாநகராட்சிகள் வாலாயமான மாநகராட்சிப் பணிகள் தவிர ஜவஹர்லால் நேரு தேசிய நகர்புற புனரமைப்புத் திட்டப் பணிகள் மற்றும் ஏனைய பணிகளை எடுத்து நிறைவேற்றி வருவதாகவும், 1996ஆம் வருடத்திய தமிழ்நாடு மாநகராட்சி பொறியியல் மற்றும் குடிநீர் விதிகளின்படி மாநகராட்சிகளில் “நகரப் பொறியாளர்” பதவிக்கு மேற்பட்ட பதவி இல்லை எனவும், ஜவஹர்லால் நேரு தேசிய நகர்புற புனரமைப்புத் திட்டப் பணிகளுக்காக பிரத்தியேகமாக ஒரு கண்காணிப்புப் பொறியாளர் பதவி மதுரை மாநகராட்சிக்கும் ஒரு கண்காணிப்புப் பொறியாளர் பதவி கோயம்புத்தூர் மாநகராட்சிக்கும் தோற்றுவிக்கப்பட்டது எனவும், நகரப் பொறியாளருக்கு தொழில்நுட்ப அனுமதி வழங்க ரூ.75.00 லட்சம் வரை அதிகார வரம்பு உள்ளதாகவும், கண்காணிப்புப் பொறியாளருக்கு ரூ 1.00 கோடி வரை அதிகார வரம்பு உள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

த.பி.பா.,

2. மேலும், மதுரை மாநகராட்சியில் ரூ.100 கோடி மதிப்பீடு கொண்ட பணிகளை எடுத்துக் கொள்ள வேண்டியிருப்பதால், ரூ.1.00 கோடிக்கு மேல் மதிப்பீடு கொண்ட பணிகளுக்கு தாமதமின்றி தொழில்நுட்ப அனுமதி வழங்க கண்காணிப்புப் பொறியாளரையும்விட கூடுதல் அதிகாரம் கொண்ட ரூ.12,000 – 375 – 16,500/– சம்பள விகிதத்தில் தலைமைப் பொறியாளர் பதவி ஒன்றை மேற்படி மாநகராட்சிகளில் தோற்றுவிப்பது இன்றியமையாதது எனவும் இப்பணியிடங்களைத் தோற்றுவிப்பதனால் அரசுக்கு நிதிச் சுமை ஏதுமில்லை எனவும் நகராட்சி நிர்வாக ஆணையர் தெரிவித்துள்ளார்.

3. மேலும், மதுரை மாநகராட்சியைப் பொறுத்தவரை தற்போது கண்காணிப்புப் பொறியாளர் நிலைக்கு உயர்த்தப்பட்ட நகரப் பொறியாளர் பதவியினை தலைமைப் பொறியாளர் பதவியாக நிலை உயர்த்தலாம் எனவும் அவர் பரிந்துரை செய்துள்ளார்.

4. நகராட்சி நிர்வாக ஆணையர் கருத்துரு குறித்து அரசு கவனமுடன் பரிசீலித்து மதுரை மாநகராட்சியைப் பொறுத்தவரை, தற்போது கண்காணிப்புப் பொறியாளர் நிலைக்கு உயர்த்தப்பட்டுள்ள நகரப் பொறியாளர் பணியிடத்தினை தலைமைப் பொறியாளர் பணியிடமாக நிலை உயர்த்தி ஆணையிடுகிறது.

/ஆளுநரின் ஆணைப்படி/

**நிரஞ்சன் மார்டி,**
**அரசுச் செயலாளர்.**

பெறுநர்
நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை–5
ஆணையர், மதுரை மாநகராட்சி, மதுரை
இயக்குநர், உள்ளாட்சி நிதித் தணிக்கை, குறளகம், சென்னை–108
நகல்
நிதித் (நநிமகு) துறை, சென்னை–9
மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சரின் முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை–9
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை செயலரின் தனிச் செயலர், சென்னை–9
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நப–3/அந–2) துறை, சென்னை–9

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

பிரிவு அலுவலர்